Copyright 2009 Singapore Press Holdings Ltd.

# சோற்று உருண்டையில் தேசியக் கொடி



துணை பிரதமர் டியோ சீ ஹியனுடன் இணைந்து 400க்கும் மேற்பட்ட குடியிருப்பாளர்கள் பிசின் அரிசிச் சோறு உருண்டைகளால் சிங்கப்பூர்க் கொடியை நேற்று வடிவமைத்தனர்.

சிங்கப்பூரில் 44வது தேசிய நாள் கொண்டாட்டத்தை முன்னிட்டு 44,000 சோற்று உருண்டைகளால் உருவாக்கப்பட்ட இந்த ஆகப் பெரிய சோற்று உருண்டைக் கொடி, சிங்கப்பூர் சாதனைப் புத்தகத்தில் இடம் பெறும்.

இரண்டு மணி நேரத்தில் ஆக அதிகமான உருண்டைகளை உருவாக்கிய சாதனையும் படைக்கப்பட்டது.

பாசிர் ரிஸ் மேற்கு குடும்ப தினத்தில் இந்தச் சாதனைக் கொடி உருவாக்கத்துடன் சமையல் போட்டி நிகழ்ச்சியும் இடம் பெற்றது.

தற்காப்பு அமைச்சருமான திரு டியோ தமது மனைவியுடன் சேர்ந்து "டங் யுவன்" எனப்படும் பிசின் அரிசி உருண்டைகளை சமைத்தார்.

அத்துடன் சமையல் போட்டியில் பங்கேற்று தமது கைத்திறனைக் காட்டினார். ஆண்களுக்கான சமையல் மன்றத்தையும் தொடங்கி வைத்தார்.

நிகழ்ச்சியில் சீன, இந்திய, மலாய் உணவு வகைகளை 10 குடும்பங்கள் சமைத்துக் காட்டின. பாசிர் ரிஸ் இலியாஸ் சமூக மன்றமும் மக்கள் கழகமும் இணைந்து இந்த குடும்ப நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்திருந்தது.

படங்கள்: லியன்ஹ சாங் பாவ்



துணை பிரதமர் டியோ சீ ஹியனின் சமையல் திறனை ரசிக்கும் அவரது மனைவி (மேல்படம்).

இடப்புறப் படம்: குடியிருப்பாளர்களுடன் சேர்ந்து தேசியக் கொடியை உருவாக்கும் அமைச்சர்.

வெள்ளை, சிவப்பு நிற பிசின் அரிசி உருண்டைகளால் (டங் யுவான்) உருவாக்கப்பட்ட ஆகப் பெரிய நீள சிங்கப்பூர்க் கொடி. 2.75 மீட்டர் நீளமும் 1.65 மீட்டர் அகலமும் கொண்ட இந்தக் கொடி 44,000 சோற்று உருண்டைகளால் உருவாக்கப்பட்டது.